நூற்றாண்டு விழாப் பிரசங்கம்

அக்டோபர் 5, 2008

# தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாகச் சபை

1 பேதுரு 2:9–10

விரிவான வேதவாசிப்பு: 1 பேதுரு 2:1–11

கூடுதலான வேதவாசிப்பு: யாத்திராகமம் 19:1–6; ஓசியா 1:1–11; யோவான் 3:1–17

**முன்னுரை**

ஒரு டெக்சாஸ் பிரெய்ரி புல்வெளியில் நிறுவப்பட்டிருந்த ஒரு பெரிய கூடாரத்தின் கீழாக 1908ஆம் ஆண்டு அக்டோபர் 13ஆம் நாள் ஒரு மகிமையான தரிசனம் உருவம்பெறத் துவங்கியது. பல நாட்கள் தொடர்ந்த பிரசங்கம், ஜெபம், பேச்சுவார்த்தைகள் மற்றும் விவாதத்துக்குப் பிறகு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பல பகுதிகளின் சபைகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் வாக்கெடுப்பின் மூலம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு இறுதித் தீர்மான முன்வரைவைத் தயாரித்தார்கள். மக்களைக் கொண்டாட்டத்தின் ஆவி பற்றிக்கொண்டது. அவர்கள் கூடாரத்தைவிட்டு வெளியேறி பாடியபடியும், தேவனைத் துதித்தபடியும் கூடாரத்தைச் சுற்றி வந்தார்கள். அவர்கள் பலராக இருந்தாலும் இப்போது ஒன்றாகிவிட்டிருக்கிறார்கள்.

ஒரு *செய்தியே* அவர்களை ஒன்றாகக் கொண்டுவந்தது. வெவ்வேறு சபைகளையும், அமைப்புக்களையும் சேர்ந்த 10,000 பேர் வெஸ்லிய பரிசுத்த பாரம்பரியத்தில் இருதயத்திலும் வாழ்க்கையிலும் பரிசுத்தத்தைக் குறித்த செய்தியைத் தீவிரமாக அறிவித்தார்கள். ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவர்கள் சிறிய குழுவினராக இருந்தாலும், பெரும்பாலான குழுவினர் அமெரிக்காவிலும் கனடாவிலும் சபைகளையும் அருட்பணி அமைப்புக்களையும் கொண்டிருந்தார்கள், இந்தியா, கேப் வெர்ட், ஜப்பான் போன்ற இடங்களுக்கு அருட்பணியாளர்களை அனுப்பியிருந்தார்கள். விரைவிலேயே ஆப்பிரிக்கா, மெக்சிகோ, சீனாவில் ஊழியங்களைத் துவங்கவிருந்தார்கள். ''தேசமெங்கும் பரிசுத்தத்தைப் பரப்புவதற்கான'' வாஞ்சையில் ஒப்படைப்புக் கொண்டிருந்த அவர்கள் டெக்சாஸில் பைலட் பாயின்ட் என்ற இந்த இடத்திலிருந்து கிருபையைக் குறித்த நல்ல எதிர்பார்ப்போடு புறப்பட்டுச் சென்றார்கள். உலகமெங்கும் இந்தச் செய்தியைக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற தீவிர உணர்வை அவர்கள் பெற்றிருந்தார்கள்.

டெக்சாசிலிருந்த அந்த பிரெய்ரி புல்வெளியில் அவர்கள் துவங்கிய அந்தச் சபை நூறாண்டுகள் கழித்து 1.6 மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. 151 உலகப் பகுதிகளில் 120க்கும் மேற்பட்ட மொழிகளில் ஊழியம்செய்து வருகிறது. ஒன்றிலிருந்து நாம் பலவாகப் பெருகிவிட்டிருக்கிறோம்.

அன்பான போதகரே,

இந்த நூற்றாண்டு ஞாயிறன்று நாம் நமது வரலாற்றையும் பாரம்பரியத்தையும் கொண்டாடும் சிலாக்கியத்தை மட்டும் பெற்றிருக்கவில்லை. சுவிசேஷத்தை அறிவித்து, மக்களைக் கிறிஸ்துவுக்காகத் தீர்மானம் எடுக்கும்படி அழைப்பதற்கான வாய்ப்பையும் பெற்றிருக்கிறோம். மன்னிப்புத் தேவைப்படுகிறவர்கள் மனந்திரும்பி கிறிஸ்துவிடம் வந்து, முழுமையான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களை ஊக்குவிக்க இந்த வசனத்தையும் பிரசங்கத்தையும் பயன்படுத்திக்கொள்ளும்படி வலியுறுத்துகிறேன். இன்னும் பரிசுத்தமாக்கப்பட்டிராத விசுவாசிகள் தங்களுடைய வாழ்க்கையைத் தேவனுக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுத்து, ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ளும்படி ஊக்குவியுங்கள். தேவன் இன்று தமது மக்களைத் தம்மிடம் இழுத்துக்கொள்ள உங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இது இரட்சிப்பு மற்றும் பரிசுத்தத்தின் செய்தியை அறிவிக்கும் நாளாக மட்டுமல்ல, அதை முதன் முறையாக அனுபவிக்கும் மக்களோடு சேர்ந்து கொண்டாடும் நாளாகவும் இருப்பதாக!

**– ஜெசி சி. மிட்டன்டார்ப், பொதுக் கண்காணிப்பாளர்**

விசுவாசிகளின் அந்தப் புதிய சரீரமானது தனித்துத் தாங்கள் பெற்றிராத பலத்தை ஒன்றுபட்ட முயற்சியின்மூலம் பெறுகிறோம் என்பதை உணர்ந்திருந்தார்கள். தனித்துவம் குறித்த வலுவான உணர்வை வளர்ப்பதற்காக அவர்கள் ஒப்படைப்புக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நசரேயர்களாக இருந்தார்கள்! பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலில் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். காருணிய ஊழியத்திலும் சுவிசேஷ ஊழியத்திலும் அவர்கள் தீவிரமான ஆர்வம்கொண்டிருந்தார்கள். பரிசுத்தத்தைக் குறித்த செய்தியில் அதிகத் துடிப்பைப் பெற்றிருந்தார்கள்.

ஆனால் தங்கள் பணி எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதையும் அவர்கள் உனர்ந்திருந்தார்கள். உலகம் விரைவிலேயே பெரிய போரில் சிக்கிக்கொண்டது. வளர்ந்துவந்த சபைப்பிரிவானது ஊழியத்திற்காகப் புதிதாகத் திறக்கப்பட்ட கதவுகளின் வழியாக நுழைந்தபோது ஆதாரங்களில் நெருக்கடி ஏற்பட்டது. யுத்தத்தில் சிக்கியிருந்த உலகத்தில் துணிவுள்ள அருட்பணியாளர்கள் தங்கள் உயிருக்கும் கவலைப்படாமல் தொலைவான இடங்களில் சுவிசேஷத்தை அறிவித்தார்கள். உலகெங்கும் பரவிய பொருளாதார வீழ்ச்சி நிதிசம்பந்தமான காரியங்களில் நெருக்கடியை உண்டாக்கியது. வளர்ச்சி அதிகமானால் அது போதுமான ஆதாரங்களுக்கு உத்தரவாதமாகும் என்பது நிச்சயமில்லை என்ற உண்மையை இளைய சபை உணர்ந்தது. சீக்கிரத்திலேயே இரண்டாம் உலகப் போர் பல நாடுகளில் அருட்பணி ஊழியத்தை நிறுத்திப்போட்டது. சில அருட்பணியாளர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள்.

ஆனால் சபையானது தொடர்ந்து ஊழியம் செய்தது, வளர்ச்சியைப் பெற்றது. உலகெங்கிலும் நெருக்கம் அதிகமாக இருந்தாலும், அது சபைகளை நிறுவியது, பள்ளிகளும், மருத்துவமனைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. சபையானது தனது உலகளாவிய விரிவாக்கத்தைத் தொடர்ந்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவிலிருந்த சபையில் துரிதமான வளர்ச்சி ஏற்பட்டது. நூற்றுக்கணக்கான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன, புதிய மறைமாவட்டங்கள் துவங்கப் பட்டன, கல்லூரிகள் வளர்ச்சிபெற்றன. கொலராடோ ஸ்பிரிங்சில் நசரேய வேதாகமக் கல்லூரியும், கான்சாஸ் சிடியில் நசரேய இறையியல் கல்லூரியும் துவங்கப்பட்டன. வளர்ந்து வந்த சபை உலகளாவிய ஊழியத்துக்காக மக்களை அனுப்பியது, நிதியைச் செலவிட்டது. விரைவிலேயே அருட்பணியாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டியது. நசரேய ஊழியம் நடக்கும் உலகப் பகுதிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. உலகளாவிய சுவிசேஷ முயற்சி அதிகமான ஆற்றலுடையதாக இருந்தபடியால், நமது முதல் நூற்றாண்டின் கடைசி ஆண்டுகளுக்குள்ளாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் கனடாவின் சபை உறுப்பினர் எண்ணிக்கையைவிட மற்ற உலகப் பகுதிகளின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது.

இந்த நூற்றாண்டு முழுவதிலும், பல சபைகளை நசரேய சபையாக ஒன்றாக இணைத்த பரிசுத்தத்தின் செய்தியின் மூலம் கிறிஸ்துவைப்போன்ற சீஷர்களை உருவாக்க வேண்டும் என்ற அதே வாஞ்சையில் நாம் செயல்பட்டுவருகிறோம். பரிசுத்தத்தின் செய்தியே 1908இல் சபையை ஒன்றாக இணைக்கத் தூண்டுதலாக இருந்தது. விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் இந்த மகிமையான சோதனையின் எதிர்கால நம்பிக்கை பரிசுத்தத்தைக் குறித்த செய்தியாகவே இருக்கிறது.

இப்போது நாம் பூலோகமெங்கும் சிதறியிருக்கும் மக்களாக இருக்கிறோம். என்றாலும் ஒரு செய்தியினால் ஒன்றுபட்ட மக்களாகச் சுவிசேஷ ஊழியத்திலும், சீஷராக்குவதிலும், காருணிய ஊழியங்களிலும் துடிப்போடு ஈடுபட்டிருக்கிறோம்.

ஆனால் இந்தச் செய்தி நமக்குள்ளிருந்து துவங்கவில்லை. அது நமக்கு மட்டுமே சொந்தமானது அல்ல.

கிறிஸ்துவை உண்மையோடும் உறுதியோடும் பின்பற்றிய சீஷராகிய சீமோன் பேதுரு தனது இரண்டு புதிய ஏற்பாட்டு நிருபங்களில் இப்போது துருக்கி என்று அழைக்கப்படும் சின்ன ஆசியாவில் சிதறியிருந்த கிறிஸ்தவர்களுக்கான செய்தியைக் கொடுத்திருக்கிறார். அவர்களுடைய ஸ்திரத் தன்மைக்கும், அவர்களுடைய ஆற்றலுக்கும், அவர்களுடைய செய்திக்கும் எதிரான தீவிரமான சவாலை எதிர்நோக்கும்படி பேதுரு கிறிஸ்தவர்களுக்கு அறைகூவல் விடுக்கிறார்.

அவர்களுடைய மெய்யான தனித்துவம் என்ன என்பதைப் பேதுரு அவர்களுக்கு நினைவு படுத்தினார். அவர்கள் புதிய இஸ்ரவேலாக இருந்தார்கள். கிறிஸ்துவின் மூலமாகஅவர்கள் பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்களோடு நேரடியான தொடர்பைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் தேவனுடைய புதிய மக்களாக இருந்தார்கள்.

**1. தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள்**

தனது நிருபத்தை வாசிப்பவர்கள் தாங்களாகவே தேவனுடைய மக்களாகிவிடவில்லை என்பதைப் பேதுரு அவர்களுக்குத் தெளிவுபடுத்தினார். அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்று அவர் கூறினார். அவர்கள் கிருபையினால் உருவாக்கப்பட்ட மக்களாக இருந்தார்கள். தங்களுடைய இருப்புக்கும் தங்களுடைய செய்திக்கும் அவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆதாரமானவர்களாக இருக்கவில்லை. தேவனே தமது மக்களாகும்படி அவர்களை அழைத்திருக்கிறார்.

தனது அறிமுக வார்த்தைகளில் பேதுரு அவர்களை தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகள் என்று அழைக்கிறார் [1 பேதுரு 1:2]. தேவனுடைய முன்னறிவின்படி அவர்கள் ''ஆவியானவரின் பரிசுத்த மாக்குதலில்'' தெரிந்துகொள்ளப்பட்டிருந்தார்கள்.

இந்தத் தெரிந்துகொள்ளுதல் பேதுரு எந்த விசுவாசிகளுக்கு எழுதினாரோ அவர்களுக்கு மட்டுமே தனிச்சிறப்பானது அல்ல. இது காலம்காலமாக தேவனுடைய மக்கள் எல்லோருக்கும் பொதுவான மரபுரிமையாக இருக்கிறது. அவரே நமது இரட்சிப்பைத் துவக்குகிறவராக இருக்கிறார். அவர் நம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார்.

இந்த நம்பிக்கையானது நசரேயத் திருச்சபையின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்துக்குப் பலத்தையும் முக்கியத்துவத்தையும் கொடுக்கிறது. அவர் நம்மைத் தெரிந்துகொண்டு, நம்மை அழைத்து, நம்மைக் கிருபையின் மக்களாக உருவாக்கியிருக்கிறார் என்பது நமது நம்பிக்கையாக இருக்கிறது. அவர் தமது கிருபையினாலும் இரக்கத்தினாலும் நாம் இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்படி நம்மைப் பலப்படுத்தியிருக்கிறார். ஒரு உடன்படிக்கைச் சமூகமாக நம்மை ஒருவர் மற்றவரோடு உறவுக்குள் கொண்டுவந்திருக்கிறார்.

பேதுரு இந்த உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்: ''முன்னே நீங்கள்தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கீறீர்கள்'' [2:10].

இந்த உண்மை நமக்கு மட்டுமே உரியதல்ல; இது தேவனுடைய கிருபையின் கிரியைகளுக்குச் செவிசாய்த்த எல்லோருக்குமுரிய அற்புதமான மரபுரிமையாக இருக்கிறது. அவர் எல்லா மக்களையும் தம்மிடம் அழைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவை மெய்யாகவே இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டுள்ள எல்லோருடனும் நாம் ஒரே உடன்படிக்கைச் சமூகமாக இணைக்கப்பட்டிருக்கிறோம்.

இந்த உண்மை நிலையை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? தேவனுடைய மன்னிப்பு மற்றும் இரக்கத்தின் அற்புதத்தை அனுபவித்திருக்கிறீர்களா? உங்களால் அவரை அறிய முடியும்! இதுவே நமது செய்தியின் மையமாக இருக்கிறது. இன்றே இப்போதே இயேசுகிறிஸ்துவை நீங்கள் தனிப்பட்ட முறையில் அறிந்துகொள்ள முடியும்! அவருடைய இருதயத்திலிருந்து பாய்ந்து வெளிப்படும் கிருபையின் மூலமாக அவர் உங்களைத் தம்மிடம் அழைக்கிறார். அவர் உங்கள்மீது எவ்வளவாக அன்புவைத்திருக்கிறார் என்பதற்கு அவருடைய பாடுமரணமே அளவுகோலாக இருக்கிறது. அவரை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? அவரை அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா? இன்றே நீங்கள் அவரை அறிந்துகொள்ளலாம். நீங்களும் இந்தப் புதிய மக்களின் – தேவனுடைய மக்களின் – ஒரு அங்கமாக மாறலாம். அவர் உங்களுக்குத் தேவைப்படுகிறார் என்பதை ஒப்புக்கொள்ளுங்கள். உங்கள் பாவங்களை அவரிடம் அறிக்கையிடுங்கள். உங்கள் பாவங்களைவிட்டுத் திரும்புங்கள்! இப்போதே! முழுவதுமாக! அவர்மீது நம்பிக்கை வையுங்கள்!

ஒரு பரந்த நிலப்பரப்பில் சிதறிக்கிடந்த, பெரும்பாலும் தனித்திருந்த மக்களுக்கு எழுதிய பேதுரு சோதனையான சூழ்நிலைகளுக்கு மத்தியில் அவர்களுடைய விசுவாசத்தை ஊக்குவித்தார். *நீங்கள்*

*தனியாக இருக்கவில்லை, நீங்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள். நீங்கள் ஒரு புதிய மக்களாக – தேவனுடைய மக்களாக – இருக்கிறீர்கள்* என்று அவர் கூறினார்.

**2. பரிசுத்த மக்கள்**

பேதுரு தொடர்ந்து தெரிந்துகொள்ளப்படுதலின் ஒரு முக்கியமான அம்சத்தை உறுதிப்படுத்துகிறார். ''... பரிசுத்த ஜாதியாயும் இருக்கிறீர்கள்'' என்று அவர் சொல்லுகிறார் [2:9].

எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலையில் பாளயமிறங்கியிருக்கும்போது தேவன் மோசேயின் மூலமாக அவர்களோடு பேசினார்: ''பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்'' [யாத்திராகமம் 19:6].

எல்லா விசுவாசிகளும் துணிவோடு உரிமைகொண்டாடக் கூடியதைப் பேதுரு எதிரொலித்தார்: ''நீங்களோ, ... தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்'' [2:9]. சீமோன் பேதுரு இஸ்ரவேலரின் மரபுரிமையை எடுத்து அதைத் தாம் யாருக்கு எழுதுகிறாரோ அந்த மக்களுக்கு உரிமையாக்கிக் கொடுக்கிறார். *நீங்கள் பிதாவானவரின் முன்னறிவினாலே தெரிந்துகொள்ளப்பட்டு, இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்படியாகப் பரிசுத்த ஆவியானவராலே பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறீர்கள்* என்று அவர் கூறினார். *இதுவே உங்கள் மரபுரிமை, இதுவே உங்கள் எதிர்காலம். நீங்கள் தேவனுடைய பரிசுத்த மக்களாக இருக்கிறீர்கள்.*

அவர் தனது நிருபத்தில் ஏற்கெனவே இஸ்ரவேலரின் மரபுரிமையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவர் தமது வாசகர்களுக்கு அதைப் பொருத்திக் காட்டினார். ''நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே'' [1 பேதுரு 1:14–16].

பேதுரு தனது வாசகர்களை அழைக்கும் மரபுரிமையாகிய பரிசுத்தத்துக்குள்ளேயே தேவன் நசரேய சபையை அழைத்திருக்கிறார். நாம் பரிசுத்தத்துக்கான அழைப்பை உணர்வோடு தழுவிக் கொண்டிருக்கிறோம். நமது விசுவாச ஷரத்துக்களில் அது உள்ளடங்கியிருக்கிறது. நமது பிரசங்கத்தில் அதுவே வலியுறுத்தப்படுகிறது. அதுவே நமது வாழ்க்கையின் மையப் பார்வையாக இருக்கிறது.

நசரேயர்கள் என்று ஒரே சரீரமாகவும், அதன் அவயவங்களாகவும் அழைக்கப்பட்டிருக்கும் நாம் பரிசுத்த மக்களாக இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆவியானவரின் பரிசுத்தமாக்கும் கிரியையின்மூலமாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்தத்தில் வாழும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இது அன்பிலும் மனதுருக்கத்திலும், இரக்கத்திலும் ஏற்றுக்கொள்ளுதலிலும் கீழ்ப்படிவதாகும். இது பாவத்தின் எல்லா வடிவங்களுக்கும் எதிர்த்து நிற்கும்படியாகவும், நம்மைச் சுற்றியுள்ள உலகத்தோடு ஒத்துப்போவதை எதிர்த்து நிற்கும்படியாகவும் கீழ்ப்படிவதாகும்.

இது கிறிஸ்துவின் ஆளுகைக்கும், ஆவியானவரால் பலப்படுத்தப்படும் வாழ்க்கைக்கும், எல்லா வகைப்பட்ட மக்களின்மீதும் ஆழமாக அன்புகூருவதற்கும் தன்னைத்தானே ஒப்புக்கொடுக்கும் கீழ்ப்படிதலாகும். இது நம்மைச் சுற்றியுள்ளவர்களின் தேவைகளைக் கவனிக்கும் கீழ்ப்படிதலாகும்.

இதைக் குறித்து உங்களிடம் கேட்க நான் விரும்புகிறேன். இந்தப் பரிசுத்தத்தின் அற்புதமான கிருபை, இந்த முழுமையாகப் பரிசுத்தமாக்கப்படுதல் வெறும் கொள்கை மட்டுமல்ல. இது நசரேயர்களாகிய நாம் நமது வரலாறு முழுவதிலும் பிரசங்கித்து, வாழ்ந்துகாட்டிய ஆழமான வாழ்க்கை முறையாகும். இதற்காகவே நாம் இருக்கிறோம். ஆனால் இன்று நான் உங்களிடம் ஒருகேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இந்த அற்புதமான கிருபையை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களா? தேவ

ஆவியானவர் உங்களில் கிரியைசெய்யும்படியாகவும், உங்களைத் தம்மோடு நெருக்கமாக இழுக்கும் படியாகவும், கிறிஸ்துவின் சாயலில் உங்களை வடிவமைக்கும்படியாகவும் நீங்கள் அனுமதித்திருக் கிறீர்களா? பரிசுத்த ஆவியானவரின் பரிசுத்தமாக்கும் முழுமைக்குள் உங்கள் சித்தத்தை முழுமையாக ஒப்புக்கொடுக்கும் கணத்தை அனுபவித்திருக்கிறீர்களா? அவர் தம்மால் உங்களை நிரப்ப வாஞ்சிக் கிறார். அவர் உங்கள் இருதயத்தைச் சுத்திகரிக்க விரும்புகிறார். இந்த ஒப்புக்கொடுத்தலின் கணத்துக்காக அவர் உங்களை *அழைக்கிறார்*. இதுவே உங்களுக்கான அவருடைய சித்தமாக இருக்கிறது!

அவருடைய நிறைவை நீங்கள் நாடுவீர்களா? உங்கள் வாழ்க்கையில் வேறு எந்த ஆளுகைக்கும் இடம் கொடுக்காமல் உங்கள் மீட்கப்பட்ட வாழ்க்கையை அவருக்கு ஒப்புக் கொடுப்பீர்களா? உங்கள் ஆத்துமாவின் ஆழத்தில் உங்களுடைய வாழ்க்கைக்கு ஆண்டவராக இருக்கும்படி அவரை அனுமதிப்பீர்களா? அவர்மீது நம்பிக்கை வையுங்கள். அவருக்கு ஒப்புக் கொடுங்கள்! அவர் தமது ஆவியானவரால் உங்களை நிரப்ப வாஞ்சிக்கிறார்!

இதுவே நமது சபையின் பொதுவான மரபுரிமையாகும். விசுவாசத்தின் உடன்படிக்கை சமூகமாக நாம் இப்படித்தான் வாழ வேண்டும். இதுவே தனிநபர்களாகிய நாம் தேவனுடைய பரிசுத்தமாக்கும் வல்லமைக்கும் அவருடைய பரிசுத்தத்தோடு தனிப்பட்ட முறையில் எதிர்கொள்ளுதலுக்கும் நாம் கொண்டுவரப்படும் ஒட்டுமொத்தமான வழிவகையாக இருக்கிறது.

நசரேய திருச்சபையின் துவக்க நாட்களிலிருந்து இதுவே நமது ஊழியத்தின் மையச் செய்தியாக இருக்கிறது. நமது மக்களை முழுவதுமாகப் பரிசுத்தமாக்கும்படி வாஞ்சிக்கும் பரிசுத்த தேவனோடு மாறுதலளிக்கக் கூடிய வகையில் விசுவாசிகள் எதிர்கொள்ளுவதற்காக நாம் உலகெங்கும் சுவிசேஷத்தை அறிவிக்கிறோம்.

### 3. அனுப்பப்பட்ட மக்கள்

நாம் நம்மை ''அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத்'' தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறோம் என்று பவுல் சொல்லுகிறார் [2:9]. நாம் அனுப்பப்பட்ட மக்களாக இருக்கிறோம்.

நமது சொந்த நன்மைக்காக நாம் இதை வைத்துக்கொள்ளக் கூடாது. அவருடைய வல்லமையான கிரியைகளை அறிவிக்கும் பொறுப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தெரிந்துகொள்ளப் பட்டு, மீட்கப்பட்டு, மாற்றப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டிருக்கும் நாம் அனுப்பப்பட்டுமிருக்கிறோம். இது நமக்கு மட்டுமான தெரிந்துகொள்ளுதல் அல்ல, உலகம் முழுமைக்குமானதாகும்.

பேதுரு தான் எழுதிய இரண்டாவது நிருபத்தில் இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்: ''தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்'' [2 பேதுரு 3:9].

நிக்கொதேமுவோடு தாம் உரையாடியதைக் குறித்து இயேசு தமது சீஷர்களுக்குச் சொல்லி யிருப்பார். இந்த உரையாடல் யோவான் எழுதிய சுவிசேஷத்தின் மூன்றாம் அதிகாரத்தில் கொடுக்கப் பட்டுள்ளது. இழந்துபோனவர்களைக் குறித்த இயேசுவின் பாரத்தைப் பேதுருவும் ஏற்றுக்கொண்டிருந் தார் என்பது தெளிவாகத் தெரிகிறது. தனது ஒரே குமாரனை அனுப்புமளவுக்கு உலகத்தின்மீது அன்புகூர்ந்த தேவன் ஒருவரும் கெட்டுப்போவதை விரும்பவில்லை.

இந்த உறுதிப்பாடே நசரேயத் திருச்சபை உலகெங்கிலும் செயல்படும்படி தூண்டியிருக்கிறது. இன்னும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இருக்கும் வரையில் நம்மால் ஓய்வெடுக்க முடியாது. நமது ஊழியம் துணிவான ஒன்றாக இருக்கிறது: ஜாதிகளில் கிறிஸ்துவைப்போன்ற சீஷர்களை

உருவாக்குதல். நாம் தேவனால் அனுப்பப்பட்ட மக்களாக இருக்கிறோம். எங்குமுள்ள எல்லா மக்களுக்கும் அவருடைய கிருபையின் ஐசுவரியங்களை அறிவிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். கிருபையின் ஆக்கபூர்வமான தூண்டுதலோடும், ஆவியானவரின் வல்லமையோடும் நாம் உலகத்தைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தும்படி செல்லுகிறோம்.

நாம் அனுப்பப்பட்டிருக்கிறோம். இதுவே நமது மரபுரிமையாகவும், ஊழியமாகவும் இருக்கிறது.

**முடிவுரை/அழைப்பு**

நூறாண்டுகளுக்கும் மேலாக உலகளாவிய ஊழியத்தின் மூலமாகச் சேகரிக்கப்பட்ட ஆவிக்குரிய ஆதாரங்களோடுகூட நசரேயத் திருச்சபையானது தனது அடுத்த நூற்றாண்டை எதிர்நோக்குகிறது. நாம் தேவனுக்கடுத்த மரபுரிமையையும், அற்புதமான வரலாற்றையும், உலகளாவிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறோம். உலகெங்கிலும் நமது மக்களின் உண்மையான ஊழியத்தைக் கொண்டாடு வதற்கான எல்லாக் காரணங்களும் நமக்கு உண்டு.

நாம் வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட இறையியலையும், உண்மையோடு சபைக்கு அறைகூவல் விடுத்து அதை வழிநடத்திவந்த பயபக்தியான தலைவர்களின் பாரம்பரியத்தையும் பெற்றிருக்கிறோம். வாழ்க்கையை மாற்றும் இயேசுகிறிஸ்துவின் செய்தியைக் கொண்டு இலட்சக் கணக்கான ஆண்களையும் பெண்களையும், சிறுவர்களையும் சிறுமியர்களையும் எட்டக்கூடிய வகையில் முக்கியமான இடங்களில் நிறுவப்பட்ட சபைகளின் வலைப்பின்னல் நமக்கு இருக்கிறது. வெஸ்லிய–பரிசுத்த பாரம்பரியத்தின் சுவிசேஷ ஊழியத்திலும், புதிய விசுவாசிகள் தங்களிலும் தங்கள் மூலமாகவும் தேவனுடைய பரிசுத்தமாக்கும் வல்லமையின் அபரிமிதத்தை அனுபவிக்கும்படியாக அவர்களுக்குப் போதிப்பதிலும் அவர்களைச் சீஷராக்குவதிலும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நாம் கொண்டிருக்கிறோம்.

அடுத்த நூற்றாண்டு நாம் உரிமை கொண்டாடும்படி காத்திருக்கிறது. நாம் வெறுமனே கடந்த காலத்தைக் குறித்துக் கொண்டாடுவதும் கூடாது, இழந்துபோன வாய்ப்புக்களுக்காகப் புலம்புவதும் கூடாது. உலகத்தை மாற்றும்படியான இந்தக் கணத்தை நாம் பெற்றிருக்கிறோம்! தேவனுடைய கிருபையோடும் உதவியோடும்கூட நாம் தொடர்ந்து ‘‘அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப் பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறோம்’’ [2:9].

இந்தச் செய்தியின் துவக்கத்தில் நான் உங்களிடம் இரண்டு முக்கியமான கேள்விகளைக் கேட்டேன். அதில் ஒன்று தனிப்பட்ட இரட்சகராக இயேசு கிறிஸ்துவோடு உங்களுடைய தொடர்பைக் குறித்ததாகும். நான் மறுபடியுமாக அந்தக் கேள்வியைக் கேட்கிறேன். நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்களா? மன்னிக்கப்பட்டு, அவருடைய குடும்பத்தில் சுவிகரிக்கப்பட்டு, இயேசுவால் மட்டுமே கொடுக்கப்படக்கூடிய ஜீவனைப் பெற்று, அவருடைய பிள்ளையாக மாறும் அற்புதத்தை அனுபவித்திருக்கிறீர்களா? அப்படியிராவிட்டால், இன்றைய நாளே அதற்குரிய நாளாக இருக்கிறது!

விசுவாசிகளுக்கு நான் எனது இரண்டாவது கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்: தேவனுடைய ஆவியானவர் உங்களை முழுவதுமாகப் பரிசுத்தமாக்கும்படி அனுமதித்திருக்கிறீர்களா? கிறிஸ்து உங்கள் ஆத்துமாவின் முழுமையான எஜமானராக இருக்கிறார் என்று அறிவதின் விவரிக்கமுடியாத சந்தோஷத்தை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களா? தம்மைப்போல உங்களை மாற்றும்படி அவர் வாஞ்சிக்கிறார். தமது பரிசுத்த அன்பினால் உங்களை நிரப்பும்படி அவர் விரும்புகிறார். வேறு எதுவும் ஆளுகைசெய்யப் போட்டிபோடாமல் இருக்கும்படி உங்கள் இருதயத்தைச் சுத்திகரிக்க அவர் விரும்புகிறார். அவரால் அதைச் செய்ய முடியும்! இப்போதே அவரால் அதைச் செய்ய முடியும்! அவர் அப்படிச் செய்யும்படி அனுமதிப்பீர்களா? மறுபடியுமாக, இன்றே அதற்கான சிறப்பான நாள் என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**— ஜெசி சி. மிட்டன்டார்ப், பொதுக் கண்காணிப்பாளர்**